மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.183/2022</u>

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | C.மணி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>12.08.2025 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வாதி மணிவாசகம் எனது உறவினரா என்றால் ஆமாம். வாதியின் தாயார் பெயர் வீரம்மாள் என்றால் சரிதான். வீரம்மாளின் தாயார் பெயர் ராமாயியம்மாள் என்றால் சரிதான். வீரம்மாள் என்பவரின் தகப்பனார் பெயர் நாச்சிமுத்து நாடார். நாச்சிமுத்து நாடாருக்கு இரண்டு மனைவிகள் என்றால் ஆமாம். அதில் முதல் மனைவி வள்ளியம்மாள் என்பவரின் மகன் தான் எனது தகப்பனார் சின்னப்ப நாடார் என்றால் சரிதான்.

2. மற்றொரு மனைவி ராமாயம்மாள் என்பவரின் மகள் தான் வீரம்மாள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 1945 ஆம் ஆண்டு ராமாயம்மாள் என்பவருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. அதை என் தகப்பனாரின் தகப்பனார் தான் வாங்கினார். 1945இல் தாவா சொத்துக்களை என் தகப்பனாரின்

தகப்பனார் கிரயம் பெற்றதற்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் ஆவணங்களை பார்த்ததில்லை அதை என் தகப்பனார் தான் சொன்னார். 1945 இல் ராமாயம்மாள் கிரையம் பெற்ற சொத்துக்களை பொறுத்து தனது மகளான வீரம்மாள் என்பவருக்கு 1968 ஆம் ஆண்டு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாதிக்கபடுத்தி உள்ளார் என்றால் சரியல்ல. அது பொய் செட்டில்மென்ட்.

3. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த தான செட்டில்மெண்ட் ஆவணமானது சார் பதிவாளர் அலுவலகத்தில் முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பொய்யான ஆவணம். செட்டில்மெண்ட் ஆவணம் எத்தனை ரூபாய் முத்திரைத்தாள்களில் எழுதப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நான் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை பார்த்ததே இல்லை என்றும், அதனால் தான் என்ன மதிப்புள்ள முத்திரைத்தாள்களில் அது எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் கூட எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. வீரம்மாள் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் சரிபாதியை வாதிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றும் அதை பொறுத்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னாலும் சரியல்ல. அது பொய்யான ஆவணம். பாதி பெயரில் ஆன செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்த்து உள்ளேனா என்றால் ஆமாம்.

5. என்ன காலை எங்களை பொறுத்து மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் 1184/14டி காலை பொறுத்து ஏற்பட்டுள்ளது. அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர். அது பட்டாவில் மூன்றாக

பிரிந்துள்ளது. தான செட்டில்மெண்ட் ஆவனத்தில் காலை எண்.1184/14 டி என குறிப்பிடப்படவில்லை. 1184/14 என்று மட்டுமே குறிப்பிட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி பெயரிலான 55-1/2 சென்ட் செட்டில்மென்ட் ஆவணத்தில் சென்று நிலத்தை பொருத்த மட்டுமே செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது பொய் பத்திரம்.

6. வாதி எதற்காக இந்த வழக்கை போட்டுள்ளார் என்றால் நான் கட்டிய வீட்டை அவர் தனக்கு வேண்டுமென்று இந்த வழக்கை போட்டு உள்ளார். நான் சொல்லும் மேற்படி வீடு வாதியின் தாயார் அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்தில் உள்ள வீடு என்றால் இல்லை. பட்டா எண்.333 ல் அமைந்துள்ள வீடு. வாதி பெயரில் ஏற்பட்டுள்ள தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விபரத்தில் தாவா சொத்தில் உள்ள வீட்டின் மின் இணைப்பு எண்.957 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை அந்த மின் இணைப்பு எண் எனது வீட்டிற்கானது நான்தான் வாங்கினேன்.

7. வாதி மணிவாசகத்தை அவரது உறவினர்கள் மணி என்று தான் கூப்பிடுவார்கள் என்றால் சரிதான். என்னையும் அவ்வாறு தான் கூப்பிடுவார்கள். 1184/14 பூமியின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 9 ஏக்கர் 62 சென்ட் மேற்படி 9 ஏக்கர் 62 சென்ட் நிலத்தை பொருத்துதான் 1184/14 பூமியானது ஏ,பி,சி,டி,இ என உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1184/14 பூமியின் ஏ,பி,சி,இ ஆகிய பூமிகளை பொறுத்து ஒரே பட்டாவாக உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. எனது பட்டாவை பொருத்து மட்டும்

தான் எனக்கு தெரியும். 1184/14 பூமியின் ஏ,பி,சி,இஎன் தகப்பனார் சின்னப்பனார் பெயர் உள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணமான பட்டா என் தகப்பனார் பெயரில் வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் 1184/14டி பூமிக்கான பட்டா மட்டும் தான் என் தகப்பனார் பூமியின் பெயரில் உள்ளது என்றால் ஆமாம்.

8. பி.வா.சா.ஆ.1 பட்டாவில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள பூமிக்கு என் தகப்பனார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அந்த விபரம் பட்டாவிலேயே உள்ளது.மேற்படி பட்டாவில் கண்டுள்ள சொத்தானது காலி நிலமாக தான் உள்ளது என்றால் இல்லை வீடாக உள்ளது. என் தகப்பனார் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் இறந்து சுமார் 10, 15 வருடங்கள் இருக்கும். அவர் இறந்ததற்கு பின்பு என் தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய நான் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 பட்டாவானது அரசால் வழங்கப்பட்ட தோராய பட்டா என்றால் சரிதான்.

9. என் தகப்பனார் பெயரில் உள்ள பூமியில் கட்டி உள்ள வீட்டிற்கு என் தகப்பனார் பெயரில் வீட்டு வரி மற்றும் மின் கட்டண ரசீதுகள் ஏற்பட்டுள்ளதா என்றால் என் அப்பாவும் நானும் ஒரே குடும்பமாக இருந்ததால் நான் எனது பெயரான மணி என்ற பெயரில் ரசிதுகள் வாங்கி உள்ளேன். 2018 ஆம் ஆண்டு தான் என் தகப்பனார் இறப்பை பதிவு செய்து நான் இறப்பு சான்றிதழ் வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். 1184/14 பூமியின் ஏ,பி,சி,இ பூமிக்கான பட்டாவில் உள்ள என் தகப்பனார் பெயரை நீக்கி எனது பெயருக்கு மாற்றம் செய்ய நான் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

10. அதற்கான காரணத்தை என்னால் சொல்ல முடியுமா என்றால் வசதி பத்தவில்லை. 1184/14 ஏ,பி,சி,இ பூமிகளில் என் தகப்பனாருக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்ற காரணத்தினால் தான் மேற்படி பட்டாவில் என் தகப்பனார் இறந்ததற்கு பின்பு எனது பெயருக்கு மாற்ற நான் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1184/14–டி பூமிக்கான பட்டாவில் என் தகப்பனார் பெயர் உள்ளதால் 1184/14 பூமியின் ஏ,பி,சி,இ பூமிகளுக்கான பட்டாவில் என் தகப்பனார் பெயர் தவறுதலாக சேர்க்கப்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல. 1184/14 –டி என்ற சொத்து வேறு சொத்து என்றும், 1184/14 ஏ,பி,சி,இ சொத்துகளுக்கும் 1184/14–டி சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

11. பழனிச்சாமி என்பவர் காங்கேயம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.243/2018 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாயார் வீரம்மாள் அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 3ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் ஆமாம். அந்த வழக்கில் காலை எண்.1184/14 என்று தான் சொத்து விவரம் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் நாச்சியப்பநாடார் என்பவருக்கு 1957 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லப்பட்டு தான் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. அந்த வழக்கு காலை எண்.11 84/1,6,7,8,10,11,14 ஆகிய உட்பிரிவுகள் குறிப்பிடப்பட்டது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் மொத்த சொத்துக்களை 9 ஏக்கர் 62 சென்ட் என்று கண்டு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த வழக்கில் தீர்ப்பு சொல்லப்பட்டு விட்டது என்றால் ஆமாம். அந்த வழக்கில் வாதியின் தாயார் வீரம்மாள் என்பவருக்கு மேற்படி வழக்கு சொத்துக்களில் 4 ல் 1 பங்கு பாத்தியம் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. காலை எண்.1184/14 என்பதை தவிர்த்து காங்கேயம் சார்பு நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.243/2018 வழக்கின் வழக்கு சொத்துக்களுக்கும் இவ்வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். சாட்சி மீண்டும் சம்மந்தம் இல்லை என்கிறார். வாதியின் தாயார் வீரம்மாள் என்பவர் வாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களில் அமைந்துள்ள வீட்டை பொறுத்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14. தாவா சொத்தில் உள்ள வீட்டை பொருத்த மின் கட்டண ரசீதுகள் மற்றும் வீட்டு வரி ரசீதுகள் வாதி மணிவாசகம் என்பவரின் அழைக்கும் பெயரான மணி என்ற பெயரில் ஏற்பட்டுள்ளது என்றும் எனது பெயர் மணி என்பதால் நான் எனது பெயரில் அந்த ரசீதுகள் ஏற்பட்டுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் அனைத்தும் வாதிக்கு பாத்தியபட்டது என்றும், எனது எதிர்வாதம் ஏற்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

15. மணி என்ற பெயரில் ஏற்பட்ட மின் கட்டண ரசீதுகளை நான் தவறாக பயன்படுத்தி வரும் காரணத்தினால் தான் வாதி மணிவாசகம் தனது பெயரிலேயே மின்கட்டண ரசீதுகளை மாற்றம் செய்துள்ளார் என்று சொன்னால் வழக்கிற்கு பின்னிட்டு அவ்வாறு மாற்றம் செய்துள்ளார் நான் காலை எண்.1184/14 டி யில் உள்ள வீட்டை தாவா வாதியின் தாயார் வாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள வீட்டிற்கு பொருத்தமானது என்று கூறி எதிர்க்கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி தாவா தீர்ப்பாக தக்கது என்று சொன்னால் சரியல்ல. எனது எதிர்வாதம் செல்லத்தக்கது அல்ல என்றும், நிராகரிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.12 18:42:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்